# VLAMBARAM™ விளம்பரம்™

இலவசம்

FREE

☎ : 416 282-8059

மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை


வீடு விற்பது, வாங்குவது
வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற

☎: (416) 491- 4002 / 287 - 2183

**ராஜா எம். மகேந்திரன்**
sales rep.

*நம்பிக்கை * நேர்மை * திறமை*


நதி **VIII** **MARCH 01, 1998** பாலம் **05**



- ❊ கார்விபத்துக்களில் இளையவர்கள் கூட இறப்பது உண்மையா (பக்கம் 3)
- ❊ படுக்கும் போது இறுக்கமான உடைகள் அணியலாமா? (பக்கம் 4)
- ❊ விண்வெளி ஆய்வுகள் எப்பொழுது மிகவேகமாக வளரத்தொடங்கியது? (பக்கம் 8)
- ❊ பெண்கள் கொலோன்கள் ஆண்களை கவருமா? (பக்கம் 2)
- ❊ மீன் உணவினால் இதயவியாதியை குறைக்கலாமா? (பக்கம் 5)
- ❊ சிவாஜின் முதல்படம் எப்பொழுது வந்தது? (பக்கம் 7)
- ❊ வீட்டுவரியில் ஏற்படும் மாற்றம் வீட்டுவிலையை பாதிக்குமா? (பக்கம் 1 2 )

## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ *(416) 267-8221*

## SNR OPTICAL



அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும்.

- அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில சதிகளுமுண்டு.

ரதி **FRAME CONSULTANT** (Robert Optician)

☎: (416 )332 9995

## EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற **PL. CALL: JEYAKUMAR**

**(416) 283-4100**

(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

**Cell: 882-6741**

## SINGAPORE PAGING



| | |
|---|---|
| Motorola Brovo | $39.00 |
| NEC RELAY | $39.00 |
| MotorolaPronto | $65.00 |
| MOTOROLA EXTRA FLEX | $99.00 |

மாதம் **$5.95** மட்டுமே

- 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
- Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
- 3மாத குத்தகையும் உண்டு (ஆரம்பத்தில்)
- ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj ☎: (416) 745-2378

## ஞானம்ஸ் ஸ்ரூடியோ



Introducing 1Hour Photo Lab:
3X5 & 8X12

**Professional Photographer**
**தொடர்பு - கதிர்**

☎: (416) 750-8118

*2425 EGLINTON AV. E. UNIT 3*
*KENNEDY/ EGLINTON*
*SCARBOROUGH*

## TUITION

9ம் வகுப்பிலிருந்து 13ம் வகுப்புவரை மாணவிகளுக்கு **Math, Calculas** பாடங்களில் சந்தேகங்களையும் **Home Work Support, EXAM PREPARATION** போன்றதும் கற்பிக்கப்படும்.

☎: (416) 759-9203

## TUITION

PRIVATE TUITION IN CHEMISTRY TO GRADE 11 - GRADE 13 BY QUALIFIED AN EXPERIENCED TEACHER

☎: (416) **741-0112**

## RAAJ WATCH WORK

சகல விதமான மணிக்கூடுகளும் (**Watch & Clock**) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாவனம். **NATHAN**

☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE (Close to Biway)

## சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN, REMOTE CONTROL, AMPLIFIER நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (24 வருட அனுபவம்)

கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)

TEL: **438-9134**

## Tea Time

"THE PEOPLE OF TRADITIONS"

**Special** - Tea Time **$9.99**
String Hoppers

**Kipling & Steeles -24 Hrs**
☎ :(416) **745-0514**

**Dundas & HWY 10 - 9 AM-10PM**
☎: (905) **281-1010**

## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை *(M.A.)* பட்டதாரி ஆசிரியையினால் *KINDERGARDEN* இலிருந்து *Grade* 6 வரையிலான பிள்ளைகளுக்கு *Tution* சொல்லிக் கொடுக்கப்படும

**PL. CALL: 755-8034**

## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ்-☎ **261-6883**

**அன்பான வாசகர்களிற்கு ! தரமான தகவல்கள், ஆக்கங்கள், கட்டுரைகளை விளம்பரத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்**

## MOVING DELIVERY

- FOR SMALL OR BIG MOVING
- REASONABLE RATES
- RELIABLE SERVICES

☎: (416) 286-7562
CELLULAR PHONE: 562-7977




Parcels Pickup & Delivery

**Montreal, Toronto**
பயணிகளுக்கு ஒரு மில்லியன் டொலருக்கு காப்புறுதி வசதி செய்யப்பட்டுள்ளது

எமது வாகனங்களில் பிரயாணம் செய்யும் அனைத்து பிரயாணிகளுக்கும் தேநீர், சிற்றுண்டி ஆகியன வழங்.கப்படும்

**Open 7 Days**
9:00 am - 12:00 pm
2:00 pm - 6:00 pm

**TORONTO>MONTREAL<TORONTO**

புறப்படும் இடங்கள், பதிவு, ரிக்கட் தொடர்புகளுக்கு - பாலு Tel: (416) 266-1229

| NICKY TRAVELS & TOURS | DEP ALEXANDER | "U" CAN BUY |
|---|---|---|
| 2390 Eglinton Ave. E, #223 | 3594 BARCLAY AVE. | 5692 VICTORIA AVE. |
| Office Tel: (416) 752-2363 | TEL: 514 737-0612 | TEL: (514) 345 8622 |

## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.


VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD. SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (5) - விஜே குலத்துங்கம்



சென்ற வாரம் இசையைப் பற்றிப் பார்த்தோம். இவ்வாரம் "மணம்" அல்லது வாசனையைப் பற்றி பார்ப்போம். மணக்கும் புலனானது மற்றை புலன்களுடன் சேர்ந்து சில செயற்பாடுகளை தீர்மானிக்கின்றது. உதாரணமாக ஒரு உணவு நல்ல சுவையாகவும் பார்ப்பதற்கு நல்ல அழகாக இருந்தாலும் அதன் மணம் நன்றாக இல்லாவிட்டால் உண்ண மனம் வராது. இலங்கையில் *Durian* டூரியான் என்ற பழத்தை உண்டவர்களுக்கு அல்லது கண்டவர்களுக்கு இது புரியும். பார்ப்பதற்கு பலாப்பழம் போன்றும், நல்ல சுவை மிகுந்ததாக இருந்தாலும், அதன் மணத்தினால் கிட்டே நெருங்கமாட்டார்கள். அதேபோல் சுவையாக இல்லாவிட்டாலும் மணம் நன்றாக இருந்தால் அந்த உணவைச் சாப்பிடத் தூண்டும்.

உணவுப் பொருட்களுக்குரியது மணம் என்றும் ஆங்கிலத்தில் *Flavour* என்றும், உணவுப் பொருள் இல்லாத வாசனைத் திரவியங்களின் மணத்தை *Fragrance* என்றும் கூறுவார்கள். இன்று நாம் வாசனைத் திரவியங்களைப் பற்றிப் பார்ப்போம். பண்டைய காலம் தொட்டு, வாசனைத் திரவியங்கள் பல்வேறு கலாச்சாரங்களிலும் முக்கியத்துவத்தை வகித்து வந்துள்ளது. எமது கலாச்சாரத்திலும், பல்வேறு வாசனைகள் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்பு கொண்டன. கல்யாண வீடுகளில் பூக்களின் மணமும், கோயிலில் கற்பூரம், ஊதுபத்தி மணங்களும், விருந்து-*Party* போன்றவற்றில் *Cologne* வாசனைத் திரவிய மணங்கள் இப்படியாக மணங்கள் வேறுபடுகின்றன.

ஆரம்பத்தில் இயற்கையாக காணப்படும் பூக்கள், தாவரங்களில் இருந்து வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்டன. அதன் பின்னர் விஞ்ஞான வளர்ச்சியுடன் செயற்கையாக சேதன இரசாயனப் பொருட்களின் சேர்க்கையினால் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரிசையில் 1792ம் ஆண்டு ஜேர்மனி நாட்டில் 4711 என்ற இலக்கமிடப்பட்ட ஒரு சேர்வை பிரபல்யமானது. ஆரம்பத்தில் தலையிடியை சுகமாக்குவதற்கு இது உருவாக்கப்பட்டது. முதலில் இது, பொதுப் பெயரான "வாசனை நீர்" *"Aue de Cologne"* என அழைக்கப்பட்டு, பின்னர் இந்த பெயரே வர்த்தகப் பெயராக நிலைந்து விட்டது. பிற்காலத்தில் இது வாசனைத் திரவியமாக உபயோகிக்கப்பட்டது. தற்போது ஆண்கள் உபயோகிக்கும் பிரபல்யம் வாய்ந்த முதல் 25 *Cologne*களில் இதுவும் ஒன்றாகும். முக்கியமாக ஜேர்மனியில் இது மிகவும் பிரபல்யமானது. இந்த *Cologne, Scent* வகைகள் மூன்று வகைப்படும். ஒன்று பெண்களுக்குரியது, மற்றது ஆண்களுக்குரியது, மூன்றாவது பொதுவானது அதாவது *Gender Neutral Scents* - இரு பாலாருக்கும் பொதுவான *Cologne*கள் இந்த மூன்றாவது தற்போது மிகவும் பிரபல்மயானது. இதில் *Calvin Klein* அல்லது *CK one* என்ற *Scent* அதிகளவில் விற்பனையாகின்றது.

பெண்களுக்குரிய *Cologne* ஆண்களைக் கவரும் என்றும், ஆண்களுக்கு உரிய *Cologne* பெண்களைக் கவரும் எனவும் கருதப்படுகின்றது. இவை பொதுவான விருப்பு, வெறுப்பை வைத்து தயாரிக்கப்பட்டது. ஆனால் அண்மையில் கனடாவில் இருவகையான வாசனைத் திரவியங்கள் வெளிவிடப்பட்டன. உலகிலேயே முதல்தடவையாக செயற்கை மனித பெரோமோன்கள் *Pheromones* கொண்ட *Cologne*கள் இவை என கூறப்பட்டன.

முதலில் "பெரோமோன்கள்" என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். சாதாரண ஓமோன்கள்-*Hormones* உடலின் உள் தொழிற்பாட்டை கட்டுப்படுத்தவே சுரக்கப்படுகின்றது. ஆனால் பெரோமோன்கள் சுரக்கப்படுவது விலங்குகளில், அதே இனத்தைச் சார்ந்த மற்ற விலங்குகளுக்கு சில தூண்டுதல்களை உருவாக்கவேயாகும். இது எல்லை ஆதிக்கம், பயமுறுத்தல், அடையாளம், மற்றும் எதிர்ப்பால் விலங்குகளை கவருதல் போன்ற செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும். பெரோமோன்களின் தொழிற்பாடு விலங்குகளின் இனப்பெருக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. விலங்குகள் ஒரு குறிப்பிட்ட பருவகாலத்தில்தான் இனப்பெருக்கத்திற்கு தயாராக இருக்கின்றன. இந்தக் காலத்தில் ஆண்விலங்குகளுக்கு இதை தெரியப்படுத்த பெரோமோன்கள் சுரக்கப்படும். இவை முக்கியமாக அதிக தூரம் பறக்கும் பறவைகளிலும், அதிக தூரம் செல்லும் விலங்குகளிலும் மிகவும் பிரயோசனமாக உள்ளது. இந்த பெரோமோன்கள் பூச்சிக் கட்டுப்பாட்டிலும் உபயோகப்படுகின்றது. செயற்கைப் பெரோமோன்கள் உருவாக்கப்பட்டு அதைப் பொறியினுள் வைத்து, அதன் மூலம் ஆண் பூச்சிகளை கவர்ந்து, பொறியினுள் சிக்கவைத்து அழிக்கப்படுகின்றன. பின்னர் ஆண் பூச்சிகள் இல்லாது, இனப்பெருக்கம் தடைப்பட்டு பூச்சிகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இப்படியாக பெண் விலங்குகளில் சுரக்கப்படும் பெரோமோன்கள் ஆண் விலங்குகளை கவருவது போன்று செயற்கையான மனித பெரோமோன்கள் உருவாக்கப்பட்டு இந்த புதிய *Cologne*கள் தயாரிக்கப்படுன்றன என கூறப்படுகின்றது. இந்த *Cologne Realm* என்ற பெயரில் விற்பனையாகின்றது. இதில் ஆண்களுக்குரிய *Realm*ம் பெண்களுக்குரிய *Realm*ம் *Erox Corporation* ஆல் தயாரிக்கப்படுகின்றன.

ஆனால் இத் தயாரிப்பு வியப்பையும், சர்ச்சையையும் கிளப்பிவிட்டுள்ளது. விலங்குகளின் மூக்கில் பெரோமோன்களை உணருவதற்காக இரண்டு குழி போன்ற அமைப்புகள் காணப்படும். இது *Vomeronasal Organ - VNO* எனப்படும் இவை பெரோமோன்களை உணர்ந்து, அதை மூளைக்கு அறியத் தருகின்றது. மூளையும் அதற்கேற்ப உடலை இயங்க வைக்கின்றது.

ஆனால் மனிதரின் மூக்கினுள் இரு குழிகள் காணப்பட்டாலும் இவற்றிற்கும் மூளைக்கு இணைப்பு இல்லை என்றும் *Philadelphia* ல் உள்ள *Monell Chemical Senses Centre* ஐச் சேர்ந்த *Dr. Charles J. Wysocki* கூறியுள்ளார்.

இன்னொரு விடயம் என்னவென்றால், மனித பெரோமோன்களுக்கு மணம் இல்லை. ஆனால் இந்த *Realm Cologne* இலுள்ள வாசனை மற்றைய *Clolgne* களை போன்று, ஒரு செயற்கை வாசனையாகும். ஆனால் இந்த *Cologne* ஐ தயாரித்த நிறுவனம் 40 பேர்களில் செய்த பரிசோதனையில் இவை பாலியியல் கவர்ச்சியை உண்டாக்குகின்றன என நிருபித்துள்ளார்கள்.

எனவே இந்த *Cologne* எவ்வளவு தூரம் சக்தியுள்ளது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் - இல்லை மணந்துதான் பார்க்கவேண்டும்.


புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 82

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | | ■ | 4 |
| | 5 | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | ■ | ■ | 6 | | 7 | 8 | |
| 9 | | | | ■ | ■ | | 10 |
| ■ | 11 | ■ | | 12 | ■ | ■ | ■ |
| | ■ | | ■ | ■ | 13 | | |
| 14 | | 15 | | | | ■ | 16 |

**இடமிருந்து - வலம்**

1. இலங்கைக்கு கிடைத்து 50 ஆண்டுகள்
5. ஆகாயம் (வல - இட)
6. எடுத்துக்காட்டு
9. மறைத்து வைத்த திரவியம்
10. நகை (வல - இட)
12. நவராத்திரிக்கு வைப்பது (வல -இட)
13. இலங்கையின் இது உலகில் முதல்தரமானது
14. அதிஷ்டமுள்ளவன்

**மேலிருந்து கீழ்**

1. வெற்றிலையுடன் போடப்படுவது
2. வருந்து
3. பொய் புரட்டு
4. பாயாசம் சமைக்க உதவும்
7. நாட்டின் அரசியல் பிரிவுகளில் ஒன்று (கீழ் - மேல்)
8. விளக்கு எரிய உதவுவது
11. யுத்தக்களத்தில் பிறந்த காவியம்
13. மலரில் இருந்து எடுக்கப்படுவது
14. வழி (கீழ் - மேல்)
15. மலை (கீழ் - மேல்)
16. அடுப்பு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 27, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ந | க் | கீ | ர | ன் | ■ | ரி | க |
| ந் | ■ | ரி | ■ | தி | ரி | ச | டை |
| த | ■ | ■ | லை | ■ | ■ | ■ | சி |
| வ | ந் | தே | மா | த | ர | ம் | ■ |
| ன | ■ | ங் | ■ | ந் | ■ | ர | ■ |
| ம் | ன | கா | ■ | தி | ■ | தி | சை |
| ■ | ■ | யி | ■ | ர | ■ | த் | ■ |
| அ | ரி | ■ | ■ | ம் | ன | ச | ஆ |

**#81இல் வெற்றி பெற்றோர்**

1) MRS. K. Thevanayagam, Scarborough
2) S.Gowsika, Mississauga


நியூ ஸ்பைஸ்லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit#16 Scarborough, Ont.


**விளையாட்டு தகவல்கள்** (5ம் பக்க தொடர்ச்சி)

ஆனால் அடுத்த நாளே அம் மகிழ்ச்சி எல்லோரையும் விட்டு போய்விட்டது. ஏனெனில் கனடா செக்கோசெலவேக்கியாவிடம் அரை இறுதி ஆட்டத்தில் தோற்று விட்டது. மீண்டும் பின்லாந்திடம் 3வது இடத்திற்குரிய ஆட்டத்திலும் தோற்றுவிட்டது. ஆனால் '"விழுந்தாலும் மீசையில் மண் பிரளவில்லை" என்பதைப் போல் இறுதிநாள் கனடா 2 தங்கப்பதக்கங்களை பெறறுக்கொண்டது பாராட்டக்கூடியது.


கனடாவின் தங்கப்பதக்க விபரங்கள் (Gold Medals)

* Mens 5000M Relay
* BobSled (Mens)
* Woment Curling
* Mens Snow Boarding
*Womens 500M Relay
*Womens 500m Speed Skating

இறுதியாக எமது எல்லோரினதும் விருப்பம் தமிழ் மகன் / மகள் ஒருவர் இந்த ஒலிம்பிக்கில் கனடா சார்பில் பங்கு பெறும் நாள் எப்போது வரும் என்பதுதான்!?
தமிழ் மக்களுக்கு எதுவுமே கைவந்த கலை. ஆகவே இதுவும் வெகுவிரைவில் சாத்தியப்படக்கூடும் என்ற நம்பிக்கையுடன் ஆவலுடன் முடிக்கின்றேன்.

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing







Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] 285-4998

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )

## கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி? (2)



முதற்கட்ட (*Level 1 or G1*) சித்தியடைந்தவர்கள் *Level 2 or G2* சாரதிப்பத்திரத்தைப் பெறுவார்கள். அதன்பின்னர், அடுத்தகட்ட வீதிப்பரீட்சைக்கு ஒரு வருடத்தின் பின்னர் இரண்டாவது கட்ட வீதிப்பரீட்சைக்கு (*Level 2 or G2*) தோன்ற முடியும். இரண்டாவது வீதிப்பரீட்சையை 5 வருட காலத்திற்கு முன்னராகத் தோன்றி சித்தியடைந்து விடவேண்டும். இந்தக்குறிப்பிட்ட காலகட்டத்தில் சித்தியடையாவிட்டால் உங்கள் சாரதிப்பத்திரம் முடிவடைந்துவிடும். (*will be Expired*) பின்னர் மீண்டும் எழுத்துப்பரீட்சையில் ஆரம்பிக்க வேண்டும்.

### அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுனருடாக பயிற்சி பெறுவதால் உள்ள நன்மைகள்.

ஒன்ராரியோவில் சுமார் 400க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சாரதிப்பயிற்சி நிலையங்களுள்ளன. இதனுள் பலர் எந்த சாரதிப் பயிற்சியாளரிடம் பயிற்சி பெறுவதென்று தடுமாற வேண்டிய நிலைமையுள்ளது. இவர்கள் $250.00 இலிருந்து $800.00 வரை அறவிடுகிறார்கள் (*Approved Driver Training Courses Range From*)

(தொடர்ச்சி 8 ம் பக்கம் )


*We are entering 7 th year service in Scarborough.*



**Better Work ... Less Money**


N.T.E Auto Inc.
New Trade Engineering
We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

AUTO INC.
New Trade Engineering
151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN








குடும்ப பல்வைத்தியர்
**Family Dentist**
**Dr. Mahin Pouyan**

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் **Dr. Mahin Pouyan** ஐ நாடுங்கள்

☎: (416) 225-5522
* ஞாயிற்றுக் கிழமைகளிலும்

263 Finch Ave. E. (Finch & Bayview), North York, Ont. M2N 4S1



Pillayar Traders

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


### விஷேச போட்டி இல. 71

தற்போது நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கில் பங்குபற்றும் நாடுகளில் 12ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| னா | சீ | து | ந் | லா | ர் | த | நெ |
| ன் | ட | வீ | சு | ஜே | ர் | ம | னி |
| பா | ன் | அ | ர் | ஒ | மா | ர் | ப |
| ப் | ட | மெ | மா | ஸ் | ன் | ரா | பி |
| ஜ | ண் | ரி | ன் | ரி | ரு | பே | லா |
| வே | ல | கா | டெ | யா | ஸ் | ர | ந் |
| ர் | சு | வி | ற் | ச | லா | ந் | து |
| நோ | லி | தா | த் | இ | டா | ன | க |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை MARCH 11, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 70ன் விடைகள்**

1. நீள அளவைக் குறிக்கும் பிரித்தானிய அலகுகள் அங்குலம், அடி, யார், மைல்
2. நீள அளவைக்குறிக்கும் சர்வதேச அலகு மில்லிமீற்றர், சென்ரி மீற்றர், மீற்றர், கிலோ மீற்றர்


பரிசு பெற்றோர்:
1) தங்கேஸ்வரி K. Toronto
2) நிர்மலா குணநாதன், Willowdale

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:**ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.



# ஆரோக்கிய வாழ்வு (5) - N. செல்வசோதி



## ஹலாசனம் - என்றும் இளமை (Plough)

தரையில் சமமாக படுக்கும் நிலை

1. இரண்டு கைகளாலும் இடுப்பைப் பிடித்தபடி கால்களை மேலே தூக்கவேண்டும்.
2. கால்கள் இரண்டையும் வளைக்காமல் தலைக்குப் பின்புறமாக கொண்டுவந்து தரையைத் தொடவேண்டும்.
3. கைகள் இரண்டையும் விறைப்பாக நீட்டியபடி தரையில் பதிக்கும் நிலை

### பலன்கள்

1. உடலை என்றும் இளமையுடனும் சுறுசுறுப்புடனும் வைத்திருக்க உதவுகிறது.
2. புத்தித் தெளிவை அதிகரிக்கச் செய்வதுடன் கூடுதல் ஞாபக சக்தியையும் கொடுக்கிறது.
3. மனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.
4. கால்கள் முதுகு என்பனவற்றில் ஏற்படும் நோவுகளைப் போக்குவதுடன் வயோதிபத்திலும் இளைஞரைப் போன்ற துடிப்புடனிருக்க உதவுகிறது.

இவ்வாசனத்தை மெதுவாகவும் பொறுமையாகவும் செய்ய வேண்டும். இல்லாது விடின் இருதயத்தைப் பாதிப்புக்குள்ளாக்கிவிடும்.

## மருத்துவம் காற்று ----------------> உயிர்காப்பது அதுவே

மனிதன் உணவில்லாமல் பல நாட்கள் உயிர்வாழலாம். தண்ணீரின்றி சில நாட்கள் உயிர் வாழலாம். ஆனால் காற்றில்லாமல் சில வினாடிகள் கூடஉயிர் வாழ முடியாது. காற்றினுடைய உயிர்ச் சக்தி உயிர் மூச்சுக்கு உதவி செய்கிறது. நுரையீரலைச் சுத்தமாக்குவதுடன் ரத்தத்தில்க் கலந்துள்ள கரியமில வாயுவை அகற்றுகிறது. தூய்மையான காற்று நம் உடலை வந்தடையும் போது புத்துணர்ச்சி உண்டாகிறது. அதிக அளவு நேரம் காற்று நம்முடலில் படுவத்கேற்றவாறு உடைகளை இறுக்கமில்லாது அணிந்து கொள்ள ணே்டும்.

நேரிடையாகக் காற்று உடலைத் தீண்ட வேண்டும். காற்று நன்றாக உடனே வரும்படி ஜன்னல்கள் இருப்பது நன்று. காற்று மயிர்க்கலன்களினூடே சென்று உடலின் ஆரோக்கியத்தை அபிவுருத்தி செய்கிறது. காற்றை நன்றாக உள்ளிளுக்கும் பயிற்சிகளைச் செய்வது நல்லது. மூக்கின் வழியே காற்றை ஆழமாக உள்ளிழுத்து மெல்ல வெளிவிடுதால் ரத்தத்தைத் தூய்மைப்படுத்துகிறது. உணவு உண்கபதற்கும் படுத்து உறங்குவதற்கும் முன்னதாக காற்றை ஆழ்ந்து உள்ளுக்கு இழுத்து மெல்ல வெளிவிடும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

**யோகாசன வகுப்புக்கள்** அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறு தோறும் காலை MARKHAM / ELLESMERE இற்கு அருகாமையில் அமைந்திருக்கும் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப்படுகின்றது. மேலதிக தொடர்புகளுக்கு சத்தி : **291-5853**


**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரகப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

**நீலம் சில்க்**

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 6வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும்

நீலம் சில்க்கின் 1998ம் ஆண்டிற்கான புதிய வருகைகள்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)



*7 DAYS Open* நகரின் மத்தியில்

**GREAT ONE TEXT**

1368 QUEEN ST. WEST (QUEEN & BROCK)
TEL: (416) 588-7989



- சிறுவர்களுக்கான உடைகள்
- ஆண்கள், பெண்களுக்கான உடைகள்
- USA, LONDON, SINGAPORE புடவைகள்

* எக்ஸ்பிரஸ் பணமாற்று சேவை

- 3வது வருடத்தில் கால்பதிக்கும் GREAT ONE TEXT
EVERY WEEK ARRIVAL



**YARLCAN**
**STEAM CLEANING**





Tel: (416) 724-9085 / Pager : 600 0335 / Cell: 315 0332


<u>ஆன்மீகச் சிந்தனை</u> மனதை ஒருமுகப்படுத்த தானம் செய்தல், தன் கடமை வழி நிற்றல், நியமங்களை அனுஷ்டித்தல், வேதம் ஓதுதல், நற்பணிகள் புரிதல், பிரமச்சரியம் அனுஷ்டித்தல் முதலிய விரதங்களைச செய்வதன் இறுதி நோக்கம் மனதை ஒரு முகப்படுத்தி் பகவானிடம் தோயச் செய்வதுதான். மனதை அடக்குதலே சமாதி என்பது. இன்பம் தரும் பொருள்களைப் பெற்று ஒருவன் களிப்புறலாகாது. களிப்புக்கு வசப்படும் மனமே இன்ப துன்பம் இரண்டையும் சமமாகப் பாவிக்கிறது. - பாகவதம்

## நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் (4) -M. உமா

**மீன் உணவின் மகிமை "On Top of Everything Else, Fish is a Brain Food"**

கனடாவில் நம்மவர்கள் மீன் உணவுகளை உண்பது இறைச்சி வகைகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகும். ஏனெனில் இங்கு இறைச்சி வகைகள் சுலபமாக கிடைப்பதால் ஆகும்.

மீன் உண்பதால் பல நன்மையான விளைவுகள் உண்டாகின்றது.

- மீனில் காணப்படும் ஒரு வகையான கொழுப்பமிலம் (Omega - 3 Fatty acids) மூளையின் விருத்திக்கும் தொழிற்பாட்டிற்கும் முக்கிய பங்கை வகிக்கிறது. ஆராய்ச்சிகளின்படி மீனை அதிகளவு உணவில் சேர்ப்பவர்களின் வயது முதிர்ந்த காலத்தில் மூளையின் தொழிற்பாட்டில் ஏற்படும் குறைவு குறைவாக காணப்படுகிறது.

-கிழமைக்கு 3 தடவையாவது மீன் உணவுகளை தமது உணவில் சேர்ப்பதால் இதய வியாதி வரும் சந்தர்ப்பத்தை குறைக்கின்றது. அத்துடன் மூட்டு வியாதிகளையும் குறைக்கின்றது.

Advise மீனை தெரிவு செய்யும்போது பின்வரும் வகையான கொழுப்பு குறைந்த மீன்களை கவனத்தில் கொள்ளவும். Salmon Fish, Tuna Fish, Sardin Fish, Mackerel Fish, Blue Fish and White Fish .

நண்டு(Crabs) இறால் (Prowns) போன்ற கடல் உணவுகளில் நிரம்பிய கொழுப்பமிலம் (Saturated Fat) அதிகளவு இருப்பதால் இவைகளை அளவிற்கு அதிகமாக சேர்ப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

கோழி இறைச்சி (Poultry) Red Meat உடன் ஒப்பிடும் போது கோழி இறைச்சியில் அதிகமாக புரத உணவும் குறைவான நிரம்பிய கொழுப்பமிலமும் (Saturated Fat) இருக்கின்றது. ஆனாலும் இரும்புச்சத்தானது (Fe) இவ் இறைச்சிகளில் Red Meats ஐ விட குறைவாக இருக்கின்றது. நீங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள் இரும்புச்சத்தானது குருதியை (Blood) உருவாக்குவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. இருப்பினும் நிரம்பிய கொழுப்பமிலம் கோழி இறைச்சிகளில் குறைவாக காணப்படுவதால் Red Meatsஐ குறைத்து இதை உண்பது நன்மையாகும். கோழி Soup தடிமன் போன்ற வியாதிகளை குறைப்பதற்கு முக்கிய பங்கை வகிக்கின்றது. (கோழி Soupல் காணப்படும் Cystine எனப்படும் அமினோ அமிலமே இதற்கு காரணமாகும்.)

Advise - இவ் இறைச்சிகளின் தோலில் நிரம்பிய கொழுப்பமிலம் நிறைந்து காணப்படுகிறது. இவற்றை எப்பொழுதும் சமைப்பதற்கு முன்பு தோலை நீக்கி சமைப்பது நலமாகும்.

## விளையாட்டுத் தகவல்கள் (1) *தருபவர் எஸ். கணேஷ்*

### OH! CANADA!!

### NAGANO WINTER OLYMPICS-98



கடந்த இரு வாரங்களாக 18வது குளிர்கால ஒலிம்பிக் (பெப்ரவரி 07-22, 98) பலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட NAGANO WINTER ஒலிம்பிக்ஸ் சிறப்புடன் நடந்து முடிந்துள்ளது. இதில் குறிப்பாக அவதானிக்க கூடிய விடயம், பல தமிழ் மக்கள் முனைப்புடன் இவற்றை ஆவலுடன் எதிர்பார்த்ததை குறிப்பிடலாம். எமது மக்களின் துரித முன்னேற்றத்தை இந்நாட்டில் வந்து நோக்கும் போது மிக விரைவில் தமிழ் விளையாட்டு வீரர்கள் கனடா நாட்டின் புகழை ஒலிம்பிக்குக்கு எடுத்து செல்லும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

18வது Winter ஒலிம்பிக்ஸ் இல் கனடாவின் பங்களிப்பு மிகமிக பாராட்டக் கூடியது. Hockeyயில் இரு பாலாரனிதும் பதக்கங்களை கனடா தவறவிட்டாலும் இதுவரை காலமும் பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கையை விட கூடுதலான எண்ணிக்கையை இவ்வருடம் கனடா பெற்றுள்ளது. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் கனடா 6 தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும். கனடா 6 தங்கப்பதக்கங்கள், 5 வெள்ளிப் பதக்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்கள் பெற்று மொத்தமாக 15 பதக்கங்களை பெற்று ஒலிம்பிக்ஸ் இல் 5வது இடத்தை பெற்றுள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவெனில் அமெரிக்காவை விட ஒருபடி மேல் என்ற நிலையில் கனடா உள்ளது.

Winter ஒலிம்பிக்ஸ் இல் தனிக்காட்டு ராஜாவான ரஷ்யா இம்முறை மூன்றாவது இடத்தையே பெற்றுள்ளது. கிழக்கு, மேற்கு ஜேர்மனி இணைப்பின் பின் யாராலும் அசைக்க முடியாத அளவு ஜேர்மனி பதக்கங்களை பெற்று குவித்துள்ளது. இவ் வருடம் நோர்வே நாட்டின் முன்னேற்றம் பலராலும் பாராட்டப்படக்கூடிய தொன்றாகும்.

| | | | |
|---|---|---|---|
| பதக்கங்கள் | ஜேர்மனி - 29 | நோர்வே - 25 | ரஷ்யா - 18 |
| | ஆஸ்ரியா - 17 | கனடா - 15 | அமெரிக்கா - 13 |

கனடா மிகவும் சிறப்பாக இவ்வருடம் பதக்கங்களை பெற்றாலும், மிகமுக்கியமாக அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட Hockey விளையாட்டிலும், Mens Figuer Skating இலும் தங்கப்பதக்கத்தை பெற முடியாமை கவலைக்குரிய விடயமாகும். Mins Figur Skating இல் Elvis Stojko தங்கப் பதக்கத்தை பெறுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் துர் அதிஷ்வாமாக அவரால் வெள்ளிப் பதக்கத்தையே பெற முடிந்தது. அடுத்து Womens Hockeyயிலும் கனடா ஒரு Power House ஆக கருதப்பட்டது. ஆனால் பல தடவைகள் வெற்றிபெறகூடிய சாத்தியங்கள் இருந்தும் தங்கப்பதக்கத்தை நழுவவிட்டது கவலைக்குரியது. முக்கியமான பெரிய வருத்தம் என்னவெனில் தங்கப்பதக்கத்தை அமெரிக்காவிடம் நழுவ விட்டு விட்டோமே என்ற அங்கலாய்புதான் எல்லோரையும் கவலையில் ஆழ்த்தியது. மறுநாள் கனேடிய மக்களுக்கு சற்ற ஆறுதல் Mens Hockeyயில் அமெரிக்காவை தோற்கடித்து விட்டோமே என்ற மகிழ்ச்சி. (2ம் பக்கம் பார்க்க)

TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
"தமிழில் இலவச ஆலோசனை"
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்
ரவி நடராஜா
* தகுந்த ஆலோசனை
* சட்ட உரிமைகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
* உரிய நஷ்டஈடு * மற்றைய இழப்பீடு
* மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும்,
அறிவுரைகளுமதமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில்
பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 231-5134
FAX: (416) 231-7433

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.

குடிவரவு சட்டம் IMMIGRATION LAW
* அகதி நிலை விண்ணப்பம்
* மேன்முறையீடு
* ஸ்பொன்சர்
குற்றவியல் சட்டம் CRIMINAL LAW
விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS
ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு

தொடர்பு கொள்ளுங்கள்....> எஸ்.கே. தீசன் (416) 631-6322

IMMIGRATION CONSULTANT
Christina Staden, M.A.
Member of the Association of Immigration Counsel of Canada
18 years experience
Free assessment, LOW COST, money back guarantee*
Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307
9AM.-9P.M.

# PETRO FURNITURE IMPORTS

## GRAND OPENING SALE UNTIL MARCH 1998

***BUY DIRECT FROM FACTORY*** **- NO GST**

*LAYAWAY, FINANCING AVAILABLE, FREE DELIVERY OVER $500*




6pcs. Bedroom Set Reg. $699.[99] choice of colour **$ 349**





*3 pc. Sofa Set choice of fabric* **$ 1049**

*3 pc. Sofa, Love Seat & Chair choice of fabric* **$ 1049**



5pcs. Table & Chairs
Oak Pedestal Table W/ Leaf, Comfortable Bow Back Chairs **$548**




6pcs. Bedroom Set Reg. $1395.[99] **$ 799**




**9pcs. Oak Dinning Room Set** **$ 1249**



**Desk &Hutch** **$ 148**



**3pcs. sofa, love Seat, Chair** **$379**

**SCARBOROUGH**
4800 SHEPPARD AVE. E., #107
(JUST EAST OF MCCOWAN ROAD)
CALL - SHARMA ☎: **291-3939**

**TORONTO**
**2868-DUNDAS ST. WEST**
**(KEELE / DUNDAS)**
CALL - ☎: **604-2415**

| OPENING HOURS | |
|---|---|
| MON - FRI | 10:30 - 8:30 |
| SATURDAY | 10:30 - 6:00 |
| SUNDAY | 12:00 - 5:00 |



**KING STYLES** **TAILORING & TEXTILE**

**CUSTOM MADE MEN AND KIDS CLOTHING**

20 வருட அனுபவம் பெற்றவர் (10 வருடங்கள் - கனடா)

Mississauga, Brampton தமிழ் மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்கள் அருகாமையில் KING STYLES TAILORS

**ஆண்களிற்கான:** Suits, Pants, shirts, Blazer, Prince Suit, சர்வாணி, குர்த்தா, நாஷனல்

**பெண்களிற்கான சகலவிதமான ஆடைகளும் சிறந்த முறையில் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.**

தொடர்புகளுக்கு: **"MINIMOD" RANJAN : (905) 281-9725**
**1185 Dundas St. E. 2nd Floor, Unit 218, Mississauga, Ont. 14Y 2L6**


கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி? (8ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் எப்படி வாகனம் ஓட்டப்பழகுவதும், பழகிக்கொண்டு இருப்பவர் என்ன பிழைகள் விடுகிறார், மற்றும் ஏன் பிழை செய்கிறார் என்பதையும், எப்படி ஒரு சிக்கலான நிலையிலிருந்து சட்ட திட்டத்திற்கேற்ப வாகனம் ஓட்டலாம் என்ற பயிற்சியை அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுனரால் சிறந்த முறையில் உங்களுக்கு கற்றுத்தர முடியும். இதனால் பயிற்சி பெற்ற சாரதியிடம் நீங்கள் பயிற்சி பெறுவதால் சிறந்த சாரதியாக உருவாக முடியும்.

ஆனால் சிலநேரங்களில் பயிற்றுனர் எல்லா விடயங்களையும் கற்பிக்கமுடியாமல் போவதுமுண்டு. எனவே வாகனம் ஓட்டப் பழகும் போது அவர்களிடம் உங்களிடம் தோன்றும் கேள்விகளையும், சந்தேகங்களையும் ஏன் எதற்காக இதை செய்ய வேண்டுமென்பதையும் மேலதிக பயிற்சிகளையும் கேட்டறிந்தோ அல்லது தேவையான பயிற்சியைப் பெறுவதால் நீங்கள் ஒரு சிறந்த பாதுகாப்பான வாகன ஓட்டுனராக முடியும் என்பதில் சந்தேகமே இல்லை.

அது மட்டுமன்றி எப்படி சிக்கனமாக அதிகளவு எரிபொருளை விரையமாக்காமலும் இதர உதிரிப்பாகங்கள் விரைவில் பழுதடைவதையும் எப்படி குறைப்பதென்பதையும் அறியத் தருவார்கள். (தொடரும்) DRIVE SAVE


**மேலதிக தொடர்புகளுக்கு** *PARAM SELVA, B.Sc.*
*Driving Instructor) (Bestway Driving School)*
***TEL: (416) 431-3763*** ***PAGER (416) 374-9724***




நீங்கள் அடிக்கடி, தொலைபேசி மணி ஒலித்ததும் எடுத்துப் பேச வேண்டாம். உங்கள் தொடர்பு தேவையெனில் அவரே மறுமுறை அழைப்பார். பேசாமல் பார்த்துக் கொட்டிருந்தால் தேவையில்லாதது அமைதியாக ஒதுங்கிவிடும்! -பால் வுட்வர்ட்


# PARAN

**PHOTOGRAPHY & PHOTO STUDIO**

திருமணம் மற்றும் சகல விழாக்களையும் சிறந்த முறையிலும் மலிவாகவும் புகைப்படங்களாக்கிக் கொள்ள பரன் போட்டோ

PARAN GEORGE: (416) 332-0733


**பரன் போட்டோ ஆதரவில் விளம்பரம் நடாத்தும் குறுக்கு எண் போட்டி- 17**

| | | | | |
|---|---|---|---|---|
| a | b | | c | ■ |
| | | ■ | | d |
| ■ | ■ | e | | ■ |
| f | | ■ | ■ | g |
| h | | | | |


**இடமிருந்து வலம்**
- a. கனடா உருவாகிய ஆண்டு
- d. கனடாவின் மாகாணங்கள் (வல-இட)
- e ஒரு நாளில் இத்தனை நாழிகை உண்டு
- f. ஆகக்கூடிய தனி எண்ணை 5ஆல் பெருக்கி 3ஆல் வகுக்க வருவது.
- h. 10 மைல், 11 யார் இலுள்ள அடிகள்?

**மேலிருந்து கீழ்**
- a ஆரஞ்சு பழத்தில் இத்தனை சுளைகள் உண்டு.
- b பெண்களின் பருவங்கள் (கீழ்-மேல்)
- c (107.21 - 52.15 + 21.69 - 6.75) (70 ÷ 7)
- f தற்போது நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் ?
- g ஆங்கிலேயரிற்கும் இந்த எண்ணிற்கும் தொடர்பு இல்லை

சரியான விடைகளில் ஒருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவரிற்கு பரன் போட்டோவில் பாவிக்கக்கூடிய *$25* பெறுமதியான *GIFT CERTIFICATE* வழங்கப்படும். விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி *March 11, 98.* விடைகள் கிடைக்க வேண்டிய விலாசம் - *P.O.BOX 37527, 31 TAPSCOTT RD, SCARBOROUGH, Ont. M1B 5P9*

**#16ல் பரிசு பெற்றவர்**
**R. Rohini**
**Scarborough, Ont.**

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ■ | 1 | 9 | 8 |
| 1 | 3 | 6 | 4 | ■ |
| ■ | 5 | ■ | 0 | ■ |
| 2 | ■ | ■ | 9 | 0 |
| 1 | 2 | 2 | 5 | ■ |



### அன்றிலிருந்து இன்றுவரை சினிமா -வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 5)



அருள்மிகு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஒருமுறை தமது ஆன்மீகச் சொற்பொழிவு மத்தியில் சபையோரைப் பார்த்துக் கேட்டார். "இப்பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்த நடிகர் யார் தெரியுமா"? என்று அவர் கேட்ட கணத்திலேயே முன் வரிசையிலிருந்த விடலைப் பையன் எழுந்து சட்டெனச் சொன்னான் "சிவாஜி" என்று. கூட இருந்தவர்கள் அனைவரும் சிறுவனின் பதிலைக் கேட்டு சங்கடத்தில் நெளிந்த போது வாரியார் சுவாமிகள் தமக்கேயுரிய சமத்காரச் சிரிப்போடு "கரேக்ட்" பையன் சொல்லுகிறதும் ஒரு வகையில் சரி! ஏன்னா உயர்ந்தவங்களை நாமெல்லாம் "ஜி" போட்டுத்தானே பேசுறோம்!. உதாரணமாக காந்திஜி, ராஜாஜி, நேருஜி, நேதாஜி, இந்திராஜி, இப்படியில்லையா! இதே போலத்தான் இந்தப்பையனும் அந்தப் பரம் பொருள் சிவபெருமானை "சிவா ஜி" என்றான். சிவா பிளஸ் "ஜி" "சிவாஜி" தானே! என்று சொன்னதும் சபையே அதிரும் வகையில் கைதட்டல் வானைப்பிளந்தது.

வாரியார் சுவாமிகள் தம் எதிரில் இருந்தவர்களின் மனோ நிலையை யூகித்தவராகவே மேற்சொன்ன கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும்! அவர் எதிர்பார்த்த பதிலும் கிடைக்கவே மிகுந்து உற்சாகத்தில் அச்சிறுவனின் பதிலையே தமது நாவண்மைக்கும் பக்கபலம் ஆக்கிக் கொண்டார். அந்த அளவிற்குத் தமது நடிப்பாலும் பேச்சாலும் ஒரு பிஞ்சு உள்ளத்தில் கூட ஆழப்பதிந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். வி. சி. கணேசன் என்ற சிவாஜி கணேசன்.

நமது நடிகர் திலகம் அவர்கள் திரையுலகத்திற்கு அறிமுகமான காலகட்டத்தில் திரைப்படத்துறையில் சிறிது பின்னடைவு நிகழ்ந்து கொண்டிருந்த "இருண்ட காலம்" என்றே சொல்ல வேண்டும்.
ஏனெனில் தமிழ் திரைப்படத் துறையில் அதுவரையில் தமக்கெனத் தனியிடத்தை ஆக்கிரமித்துக் கொண்டு "தனக்கு நிகர் எவரும் இலர்" என்றிருந்த எம். கே. தியாகராஜா பாகவதரும், பி. யூ. சின்னப்பாவும் புகழ் மங்கி சற்றே பின்னடைவு கண்டிருந்த நேரம் அது!

மேற்சொன்ன இருவர் இடங்களையும் நிரப்புதற்கென நுழைக்கப்பட்ட ஒரு சிலரும் தோல்வி கண்ட நிலையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒரு சில வெற்றிப் படங்களைத் தந்து கொண்டிருந்த தமிழ்க் கதாநாயகர்களான பி.எஸ். கோவிந்தன், எஸ். எம். குமரேசன், எம். ஆர். மகாலிங்கம், நரசிம்மபாரதி, எம். என். கண்ணப்பா, முத்துகிருஷ்ணன் எனப் பலரும் முயன்று பார்த்தும் தமிழ்ப்படத் துறையில் இருளைப் போக்க முடியவில்லை.

தெலுங்குப் படங்களின் முடி சூடா மன்னர்களான என். டி. ராமராவும், ஏ.நாகேஸ்வரராவும் தமிழ்க் கதாநாயகர்களாகவும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த 1952ல் வெளிவந்த "பராசக்தி" புயல் வேகம் கொண்ட நாயகனாம் சிவாஜி கணேசன் அவர்களை நமக்கெல்லாம் அறிமுகம் செய்து வைத்தது. வெறும் பாட்டையும் நமுத்துப் போன வசனங்களையும் பேசி வந்த தமிழ்க்கதாநாயகன் ஒரு முழுமையான நடிப்பு விருந்தை தனது கனல் தெறிக்கும் வசனத்தால் படைத்துக் காட்டினான்.

தமிழ்த் திரையுலகின் நம்பிக்கை நட்சத்திரம் கலைவானைப் பிரகாசம் கொள்ளவைத்தது. அதுநாள் வரையும் வெறும் வி. சி. கணேசனாக இருந்த அந்த நாடக மேடை இளைஞன் "சிம்மக்குரலோன்" சிவாஜிகணேசன் என யாவரினாலும் புகழப்பட்டான்.

"சிவாஜி" என்கிற நாமகரணத்துக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பாத்திரப்படைப்பு எவ்வாறு உதவியதோ ... அதே அளவிற்கு "சிம்மக்குரலோன்" 'பராசக்தி கணேசன்' என்கிற அடைமொழிக்கும் உறுதுணையாக இருந்தது கலைஞர் மு.கருணாநிதியின் கனல் தெறிக்கும் வசன ஆதிக்கம்.

சிவாஜியைத் தொடர்ந்து வந்து எத்தனையோ பேர் அவரைப் போல் சொல்லாட்சியில் சில பிரமிப்பை ஏற்படுத்த முயன்ற போதும். "சிவாஜி பாணி சிவாஜி பாணிதான்" என்கிற உறுதிப்பாட்டைத் தகர்த்த முடியவில்லை! அவரது நடிப்பின் அந்தச் சாயலையும் ராஜ கம்பீர நடையின் பாதிப்பையும், ஏற்றி இறக்கி இடைவெளி விட்டுப் பேசிய பேச்சின் லாவகத்தையும் தமிழகமே தனதாக்கி கொண்டது. நமது கதாநாயகன் கணேசனின் பாணியிலேயே தமிழ் மேடைப் பேச்சாளரியின் குரலும் அதன் பின்னர் ஒலிக்க ஆரம்பித்தது எல்லா நடிகர்களுக்கும் அவர் துரோணர் ஆனார்!இன்று திரையுலகிலும் சரி நாடக உலகிலும் சரி யாவருக்கும் துரோணராக, முதல்வராக விளங்கும் நமது நடிகர் திலகம் முதன் முதல் போட்ட ஆண் வேடம் தமிழ் வளர்த்த குறுமுனியாம் அகஸ்த்தியர் வேடம். அதனாலன்றோ இன்றும் கூடக் கலையுலகின் செங்கோவலனாய் பரிமளிக்கின்றார். இவரோ சிறுவயதில் பேசிய அகஸ்திய வாய் மொழியை நீங்களும் கேளுங்கள்!

"வருக! வருக! மங்களம் உண்டாகுக! என்றமிழும் என்றும் வாழ்க! கண்மணிகாள் .. நீவிர் நாரதன் தரும் மதலைகளன்றோ! ஆ... ! என் மக்காள் பற்றற்றாரைப் பற்றுமின் நற்றவக் கோலும் நும்மை பற்றிய வாறென்னே! அந்தோ என் மனம் கவருகின்றதே!"

நடிகர் திலகத்தையே நாடகமேடையிலிருந்து கவர்ந்து செல்லத் தூண்டிய இன்னொரு வேடமென்ன... ?

சுவடுகள் தொடரும்.....


| | | | |
|---|---|---|---|
| கிரகப் பொருத்தம் பார்த்தல் | 3 | 4 | சாதகக் குறிப்பு கணித்தல் |
| ல | யோ கா சோ தி ட ம் | (416) 299-8361 | 6 |
| 12 | | | எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல் |
| சுபமுகூர்த்தம் கணித்தல் | | | பலன் பார்த்தல் |
| | 10 | 9 | |




பூச்சிகளை அழிக்க வேண்டுமா!!

உங்கள் வீடுகளில் காணப்படும் பூச்சிகள், எலிகளை அழிக்க வேண்டுமா? உடன் தொடர்பு கொள்ளுங்கள்

(416) 750-1012 / (905) 839-2966 Car Phone: (416) 617-8717

கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

துரித பணமாற்றுச் சேவை


3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

# விண்வெளி

தருபவர் - கனி

சென்ற தடவை தொலமியின் பிரபஞ்சத்திற்கான மாதிரி வடிவம் பற்றிப் பார்த்தோம். சூரியன், சந்திரன் தவிர்ந்த ஏனைய கோள்களின் இயக்கங்கள் தொலமியால் எடுத்துரைக்கப்பட்ட இயக்கங்களுடன் ஒவ்வாது பல சிக்கல்களைக் கொண்டதாக இருந்தது. தொலமியின் கருத்துப்படி கோள்கள் பூமியை மையமாகக் கொண்டு சீரான வட்டப் பாதையில், சீரான கதியில் வலம் வருவதாக இருந்தது. ஆனால் பூமியில் இருந்து அவதானிக்கையில் கோள்களின் கதி கூடச் சீரானதாக இருக்கவில்லை. கிழக்கு முகமாக நகர்ந்த கோள்கள் கதிகுறைந்து சில வேளைகளில் ஓய்வுக்கு வந்து பின் மேற்கு முகமாக அசைவது போலவும் தோற்றியது. இதன்படி அவற்றின் இயக்கங்கள் பின்வரும் அமைப்பில் காட்டப்பட்டது.




தொலமியின் மறைவின் பின் அரேபியர்கள் ஏறக்குறைய 1000 வருடங்கள் வரை விண்வெளியை ஆய்வு செய்த போதிலும் குறிப்பிடத்தக்க மாற்றமோ முன்னேற்றமோ காணப்படவில்லை. ஆய்வு செய்தவர்கள் அவதானித்தவர்கள் எல்லோருமே மதவாதிகள் அல்லது மதத்துடன் அதிக தொடர்புடையவர்களாக இருந்தமையால் அவர்களது சிந்தனை முழுவதும் பூமியை மையமாக வைத்தே காணப்பட்டது.

முதல்முதலில் போலாந்தின் மதப் போதகர் நிக்கலஸ் கோப்பநிக்கஸ் (Nicolaus Copernicus) (1473-1543) என்பவர் இச்சிக்கல்கள் தீரவேண்டுமாயின் தொலமியின் அமைப்பில் பூமியையும் சூரியனையும் இடம் மாற்றிவைக்க வேண்டும் என எண்ணினார். அதன்படி அவரது புதிய பிரபஞ்ச அமைப்பு சூரியனே பிரபஞ்சத்தின் மையம், பூமி உட்பட மற்ற எல்லாமே சூரியனை வட்டப் பாதையில் வலம் வருகின்றன என அமைந்தது. பல சிக்கல்களுக்கு ஓரளவு தீர்வு கொடுத்த இவ்வமைப்பை அவர் அப்பொழுது வெளியிடவில்லை. கத்தோலிக்க திருச்சபைகளுக்கு பயந்த அவர் தமது ஆய்வுகளின் முடிவுகளை தனது நண்பர்களுக்கு கைப்பிரதிகளாக அனுப்பியிருந்தார். இருந்தும் கூட கத்தோலிக்கத் திருச்சபை அவரது வேலைகளுக்கான விளக்கத்தைக் கேட்டிருந்தது.

1543இல் இவர் (1743-1543) இறந்த பின்னர் இவரது கூற்று ஏறக்குறைய மறந்த நிலையில் மீண்டும் தொலமியின் வடிவமே செல்வாக்குப் பெற்று இருந்தது. இறுதியில் கெப்பிளர், கலிலியோ ஆகியோரின் உறுதியான நிருபணங்களுடன் 1609 உடன் தொலமியின் பிரபஞ்சக் கொள்கை கைவிடப்பட்டு புதிய பிரபஞ்ச அமைப்பு கொடுக்கப்பட்டது. அன்றில் இருந்து மிகவேகமாக விண்வெளி ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பலபுதிய கண்டுபிடிப்புக்கள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அவற்றை வரும் நாட்களில் பார்ப்போம்.

கனடாவில் சிறந்த சாரதியாவது எப்படி? (3ம் பக்கதொடர்ச்சி)

அமெரிக்காவில் 16 இலிருந்து 24 வயதுக்கு இடைப்பட்டவர்கள் அதிகப்படியாக இறப்பது வாகன மோதலினால். இதற்குக் காரணம் சரியான வாகனப் பயிற்சியின்மை, மது, வேகமாக வாகனம் ஓட்டுவது. ஒருவர் தான் சரியாக வண்டி ஓட்டினால் போதும் என்று நினைக்கக் கூடாது. அப்படி நடந்தால் ஏன் இவ்வளவு வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன? அதனை எப்படி தவிர்ப்பது? இவற்றைத் தவிர்ப்பதற்கு தகுந்த பயிற்சியிருந்தால் கூடுதலான மோதல்ளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

யார் இந்தப் பயிற்சியைத் தருவது?

1. உங்களுக்கு சாரதிப் பயிற்சியைப் பழக்குபவர் 4 வருட பூரண சாரதிப் பத்திரத்தினைப் (G Licence) பெற்றருப்பவர் மட்டும் தேவையானால் முன் ஆசனத்தில் (Passenger Seat) உட்கார்ந்து பயிற்சியினை வழங்கலாம். அவ்வாறு பயிற்சியை வழங்குபவர் உடல் ரத்தத்தின் மதுபான அளவு 0.05%) (Blood Alcohol Content must be)விட அதிகமாகவிருக்கக் கூடாது. அதிவேக தெருக்களில் 400 Series Highways, Queen Elzabeth Way, Don Valley Parkway போன்றவற்றால் எந்தச் சந்தர்ப்பந்திலும் பயிற்சி கொடுக்கக்கூடாது. அதுமட்டுமன்றி வாகனப் பயிற்சி கொடுக்கும் போது வேறு பிரயாணிகளோ, பழகுபவர்களோ வாகனத்திலிருக்கக் கூடாது.



2. அங்கீகாரம் பெற்ற அரச அனுமதிபெற்ற சாரதிப் பயிற்றுனரூடாக பயிற்சி பெறலாம். இவர்களோடு நீங்கள் தேவையானால் அதிவேக தெருக்களில் பழக முடியும். அது மட்டுமன்றி அவர்கள் தங்களது வாகனப் பயிற்சி கொடுக்கும் வீதி ஒழுங்கு அறிவை வளர்த்துக் கொண்டிருப்பார்கள் (Up-to Date Knowledge of Traffic Regultion and Practices) சாரதிப் பயிற்சியாளர்கள் எப்படி வாகன மோதலிருந்தோ அல்லது ஒரு ஆபத்தான நிலையிலிருந்தோ பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதையும், அதனால் வரும் விளைவுகளையும் கற்பிப்பார்கள். (தொடர்ச்சி 8ம் பக்கம்)


LOW COST CARPET
& Interior's Warehouse

உரிமையாளர்: சபேசன் காங்கேசு

☎: (416) 605-1990

390 Progress Ave.,Unit 4, Scarborough, Ont.



* தரமான நிலப்படுக்கைகள் (Carpet, Hardwood Floor, Parquet Floor)
* சாளரங்களின் மறைவுச் சேலைகள் (Window Coverings, Blinds, Valance, Vertical blinds)
* வீட்டுத் தேவைகளிற்கான சாதனங்கள் (Fridge, Stove, Washer & Dryer, Dish washer)
*மற்றும் சகலவிதமான தளபாடங்களும் (Furnitures)

நீண்டகாலமாக மக்களின் தேவைக்கேற்ப விற்பனை செய்வதில் முன்னணியில் நிற்கும் நிறுவனம் LOW COST

## நியூ ராஜன் சலூன்

உங்களது அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில்

புதியதோர் நிறுவனம்



* பெரியவர்களுக்கு $9.00
* சிறுவர்களுக்கு $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு

**Tuesday to Sunday 10:30Am - 7:30Pm**

**Pl. Call: Raja Tel: (416) 741-9198**

**Pager (416) 739-2393**

**5010 Steeles Ave. W., Unit 19,**
**(Kipling / Steeles)**


## கனடிய வருமான வரி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மத்திய அரசிற்கு வழங்கப்படும் வரியானது நாம் எந்த வரிவழங்கும் பகுதியில் (Tax Bracket) உள்ளோம் என்பதற்கேற்ப மாறுபடும். ஒரு காலத்தில் 10 வித்தியாசமான வரி Brackets காணப்பட்ட போதிலும் இப்பொழுது 3 tax bracket நடைமுறையில் உள்ளது. ஒவ்வொரு tax bracket இல் உள்ளவர்களிற்கும் வித்தியாசமான tax rate காணப்படும்.

கீழுள்ள அட்டவணையில் 1997ம் ஆண்டிற்குரிய மத்திய அரசின் வரிவீதத்தை காட்டுகிறது.

**1997 FEDERAL TAX RATES**

| வரிப்படுத்தக்கூடிய வருமானம் | மத்திய அரசின் அடிப்படை வரி | மத்திய அரசின் வரிவிதம் (Margin) |
|---|---|---|
| $29,590 வரை | ———— | 17% |
| $29,591-$59,180 | $5030 | 26% |
| $59,181--------> | $15,387 | 29% |

மேலுள்ள அட்டவணை எமது வரி செலுத்தக்கூடிய வருமானம் $29,590 வரை எமது வரித்தொகை 17%ஆகும். ஆனால் வருமானம் $29,591 இற்கு வரும்போது $26% ஆகவும் வருமானம் $59,181ஐ தாண்டும்போது 29% ஆகவும் அதிகரிக்கிறது.

மாநில அரசு, மத்திய அரசிற்கு வழங்கும் வட்டியின் ஒரு குறிப்பிட்ட தொகையில் தன்னுடைய வரியையும் எடுத்துக் கொள்கிறது (உ-ம்: ஒன்றாறியோ 56%)

நாம் வழங்க இருக்கும் வருமான வரி கீழ்வரும் 3 வகையினால் வரும் வருமானத்தில் தங்கியுள்ளது.

1. தொழிலினால் வருமானம் (Employment Income ie-income earned at job)
2. முதலீட்டால் வரும் வருமானம் (Investment Income)
3. வியாபார வருமானம் (Business Income ie: income earned through self -employement)

## காதல் பலவிதம்

*காதல் உயிர் கொடுத்ததுண்டு!*
*காதல் கற்பை தின்றதுண்டு!*
*காதல் வாழ்ந்ததுண்டு!*
*காதல் கவிஞராக்கியதுண்டு!*
*காதல் பிரிந்ததுண்டு!*
*காதல் உயிர் எடுத்ததுண்டு!*
*காதல் சிரித்ததுண்டு!*
*காதல் வாழ்த்தியதுண்டு!*
*காதல் வேதமாக்கியதுண்டு!*
**ஆனால் காதல் இறந்ததில்லை!**

-கலாராணி இராசரெத்தினம்

### திருக்குறளும் விளக்கமும்

281. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

எந்தப் பொருளையும் களவாடும் நினைவு தன் நெஞ்சை அணுகாமல் பார்த்துக் (காத்தக்) கொள்பவனே இகழ்ச்சிக்கு ஆட்படாமல் வாழமுடியும்.

282. உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வே மெனல்.

பிறருக்குரிய பொருளைச் சூழ்ச்சியினால் கவர்ந்து கொள்ளலாமா என்று ஒருவன் நினைப்பதேகூடக் குற்றமாகும்.

288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

நேர்மையுள்ளவர் நெஞ்சம் அறவழியில் செல்லும் கொள்ளையடிப்போர் நெஞ்சமோ குறுக்கு வழியான வஞ்சக வழியில் செல்லும்.


NISSAN

## SCARBOROUGH NISSAN

**SALES - SERVICE - PARTS - BODY SHOP**

